மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

பொறியியல் கல்லூரிகள், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் கலை—அறிவியல் கல்லூரிகள் துவக்குவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் வீறுபெற்று, உலக அரங்கில் தனிச் சிறப்புடன் விளங்கவேண்டும் என்றால், உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி வளர்ச்சி பெறுதல் வேண்டும். ஒரு நாடு உயர் நிலையடைய உயர் கல்வி, தொழிற்கல்வி இரண்டும் இன்றியமையாதவை. மாநிலத்தில் உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி வளர்ச்சியடைந்தால் மட்டுமே புதிய புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் போன்றவை வளர்ச்சிபெறும். உயர் நிலைக் கல்வியால்தான் நாட்டின் வளர்ச்சியை உருவாக்க முடியும். அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைவது உயர் கல்வியே. இத்தகைய உயர் கல்வியின் வளர்ச்சிக்கும், தொழிற்கல்வியின் வளர்ச்சிக்கும் எனது அரசு பல முன்னோடியான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.*

பள்ளிப் படிப்பிற்குப் பிறகு, குறிப்பாக, கிராமப்புற மாணவ, மாணவியர்கள், தங்கள் கல்வியினை நிறுத்திவிடாமல் தொடர்ந்து உயர் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், எனது அரசு பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் கல்விகளுக்கான கல்லூரிகளை தமிழகத்தின் பல மாவட்டங்களில் துவக்கி வருகிறது. அந்தவகையில், 2011—2012 ஆம் ஆண்டில் 11 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன.

2012 ஏப்ரல் 19] [செல்வி ஜெ ஜெயலலிதா]
(மேசையைத் தட்டும் ஒலி) இதுவன்றி, தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, இந்த ஆண்டிலும் தமிழகத்தில் புதியதாக அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆகியவற்றைத் துவக்க எனது அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி, இந்த ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், செங்கிப்பட்டியில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், செட்டிக்கரை ஊராட்சியில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி (மேசையைத் தட்டும் ஒலி) என இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகள் துவக்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம்—ஸ்ரீரங்கம், புதுக்கோட்டை மாவட்டம்—கந்தர்வக்கோட்டை, விழுப்புரம் மாவட்டம்—சங்கராபுரம், ஈரோடு மாவட்டம்—பெருந்துறை, அரியலூர் மாவட்டம்—அரியலூர், கிருஷ்ணகிரி மாவட்டம்—ஊத்தங்கரை மற்றும் வேலூர் மாவட்டம்—ஜோலார்பேட்டை ஆகிய 7 இடங்களில் புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது Polytechnic Colleges துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—00

இதுமட்டுமல்லாமல், சேலம் மாவட்டம்—எடப்பாடி, கன்னியாகுமரி மாவட்டம்—கன்னியாகுமரி, திண்டுக்கல் மாவட்டம்—வேடசந்தூர், ஈரோடு மாவட்டம்—மொடக்குறிச்சி, மதுரை மாவட்டம்—திருமங்கலம், திருவள்ளூர் மாவட்டம்—திருவொற்றியூர், இராமநாதபுரம் மாவட்டம்—பரமக்குடி, திருநெல்வேலி மாவட்டம்— கடையநல்லூர், விருதுநகர் மாவட்டம்—அருப்புக்கோட்டை, நாகப்பட்டினம் மாவட்டம்—நாகப்பட்டினம் மற்றும் வேலூர் மாவட்டம்—அரக்கோணம் ஆகிய 11 இடங்களில் புதிதாக பல்கலைக்கழக உறுப்பு இருபாலர் கலை மற்றும் அறிவியல்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 ஏப்ரல் 19

கல்லூரிகள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறிய நகரங்களில், அரசு கல்லூரிகள் துவக்கப்படுவதால், மாவட்டங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் உள்ள மாணவ, மாணவியரின் உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி கனவுகள் நிச்சயமாக நிறைவு பெறுவதோடு மட்டுமல்லாமல், இதன்மூலம் கிடைக்கும் உயர் வேலைவாய்ப்புகளினால் அவர்களது வாழ்க்கைத் தரமும், பொருளாதார நிலையும் உயரும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பொறியியல் கல்லூரிகள், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் கலை—அறிவியல் கல்லூரிகள் துவக்குவது குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே விதி 110 என்பது தெரிந்திருக்கும். இன்றைக்குப் பட்டி தொட்டிகளிலெல்லாம் இந்த 110 விதி பேசப்படுகிற வகையிலே, தமிழகத்தின் தலைவிதியையே மாற்றுகிற புரட்சித் தலைவியின் விதியாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 110—வது விதி அமைந்திருக்கிறது. சாமான்யர்கள்கூட, கிராமத்திலே இருக்கிற பாமரர்கள்கூட, 110 விதியின்கீழ் இன்றைக்குச் சட்டமன்றத்திலே அறிக்கை வருமா என்று ஏங்குகிற அளவிற்கு, தமிழக மக்களின் ஏக்கத்தைப் போக்குகிற வகையிலே, மனித வளத்தை மேம்படுத்துகிற வகையிலே, அரசே முன்வந்து தமிழகத்திலே 2 பொறியியல் கல்லூரிகளையும், 7 தொழில்நுட்பக் கல்லூரிகளையும், 11 அரசுக் கலைக் கல்லூரிகளையும், அதாவது ஏற்கெனவே இருந்த அந்த முடக்கத்தை முடக்கி, இன்றைக்குப் புதிய முயற்சியிலே தமிழகத்தில் கல்விக் கண்ணைத் திறந்து வைத்திருக்கிற புரட்சித் தலைவி அம்மாவினுடைய நடவடிக்கையை தமிழக மக்களின் சார்பிலே நான் பாராட்டி, வரவேற்று அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*